# 1. சுமை பேதம்

ரிக்ஷாக்கார மருதையாவுக்குப் பூர்வீகம் தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த விக்கிரவாண்டி.

கல்யாணம் கட்டிக்கொண்ட இரண்டு வருஷத்திற்கெல்லாம் பெண்சாதியோடு ஏற்பட்ட சிறு சச்சரவைச் சாக்காக வைத்துக்கொண்டு ஏற்கெனவே தன் உள்ளத்தைக் கவர்ந்திருந்த 'கௌரவ லட்சியமான மிலிட்டரியில்' சேர்ந்து இரண்டு வருஷத்திற்குப் பின் கையில் இரண்டு நூறு ரூபாய் ரொக்கத்துடன் விக்கிரவாண்டிக்கே திரும்பி வந்து பழைய மருதையாவாகவே காலம் கழித்து வந்தான்.

என்னதான் இருந்தாலும் அந்த வானம் பார்த்த பூமியில் அவனால் வாழ்க்கை நடத்த முடியவில்லை. கடைசியில் கையிலிருந்த சில பத்து ரூபாய்களை வைத்துக்கொண்டு – என்ன 'பிசினஸ்' நடத்திப் பிழைத்து விடலாமென்று நினைத்தானோ? – தன் சகதர்மிணி சகிதமாக ஒரு நாள் சென்னை வந்து சேர்ந்தான்.

என்னென்னவோ முயற்சிகள்...எல்லாவற்றிலும் அவனைப் போன்றவர்களின் போட்டியும்கூட இருந்தது. முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. பின்புதான், தன்னையொத்த மனிதர்களுடன் போட்டியிடுவதைவிட யந்திரங்களுடனும், கால்நடைகளுடனும் போட்டியிடுவது எவ்வளவோ மேல் என்று நினைத்து முடிவில் ஒருநாள் கம்பீரத்துடன் 'ரிக்ஷா' வண்டியின் ஏர்க்காலைப் பற்றிக்கொண்டு தார்ரோட்டில் வியர்வைத் துளிகள் சிந்தித் தெறிக்க ஓடி ஓடி உழைத்தான்; சம்பாதித்தான்...

எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே மேம்பாலத்தின் இறக்கத்தில் 'தூங்கு மூஞ்சி' மரத்தடியில் அவன் குடும்பம் நடத்தினான்... அவனைப் போன்று அவன் சகாக்கள் பலரும் அப்படித்தான் அங்கு வாழ்ந்தனர்.

அவன் மனைவி பூங்காவனத்துக்கு மட்டும் சிற்சில சமயங்களில் தன் ஊரில் தான் வாழ்ந்த வாழ்க்கையும், இப்படி மரத்தடியில் காய்ச்சிக் குடிக்க வேண்டிய காலம் வந்ததையும் நினைக்கும் போது மனம் நையத்தான் செய்யும்... என்றாலும் மருதையாவின் சிரிப்பும் பாட்டும், கிண்டலும் கேலியும் அவற்றையெல்லாம் தட்டியெறிந்து மறக்கடித்து விடும்.

அன்று ஊரிலிருந்து பூங்காவனத்தின் தம்பி செல்லப்பன் வந்திருந்தான். தன் மாமன் பட்டணத்தில் என்னவோ பெரிதாக வேலை பார்ப்பது போலவும் தனக்கும் 'ஏதாவது வேலை கெடைச்சி ஒழுங்கா பொழச்சிக்கலாம்' என்றும் எண்ணமிட்டு வந்த செல்லப்பனுக்கு "அக்காவும் மாமனும் மரத்தடியில் பொங்கித் திங்கறதும், மாமன் மாடு மாதிரி மனுசனை வண்டியிலேத்தி இஸ்த்துக்கினு போறதும்" பெருத்த ஏமாற்றமாகவும், அவமானமாகவும் இருந்தது.

"ஏ, மாமா... போயும் போயும் பட்டணத்துக்கு ரிக்ஷா வலிக்க வா வந்தே?..." அவன் கேள்வியில் கிண்டலும் வருத்தமும் கலந்திருந்தன.



"வேறே என்னடா பண்றது? இதைவிட நல்ல வேலென்னு வேறே ஒண்ணும் எனக்குத் தோணலே... எனக்கே இன்னிக்கு இஸ்டம்னா வண்டியெ வலிச்சிக்கினு ரெண்டு சவாரி அடிப்பேன்! அப்போ மாமனுக்குக் கறியுஞ் சோறுந்தான்... ஒரு நாளைக்கு அலுப்பா இருந்ததுனா எப்பேர்ப்பட்ட ராஜா வந்து சவாரி கேட்டாலும், போடா ஜாட்டான்னு வண்டியிலேயே படுத்துக் கெடப்பேன்... நம்ம இஷ்டப்படி நம்ம வேலெ... வேறே என்னடா வேணும்..."

"அது என்னவோ மாமா... நம்ம ஊர்க்காரங்க யாராவது பார்த்தாங்கன்னா..."

"அட... இவன் யார்ரா... ஊர்க்காரன் ஊர்லே... இங்கே என்னா திருடறமா, கொள்ளை அடிக்கறமா... கஷ்டப்பட்டு ஒழச்சா கூலி... இதிலே என்னா மச்சான் அவுமானம்?..."

"எனக்கு என்னவோ பிடிக்கலை மாமா..."

"போடா... இவுரு கலெக்டரு பேரன்... கவுனரு உத்தியோகந்தான் பாப்பாரு. நம்மாலே ஆவாதுடா சாமீ..."

"சரி... சோத்தெத் துன்னுப்புட்டுப் பேசுங்க"... என்று அழைப்பு விடுத்தாள் பூங்காவனம்.

அலுமினியம் தட்டிலிருந்த பழைய சோத்தைச் சாப்பிட்டுக் கொண்டே சொன்னான் மருதை:

"தோ... பாருடா மச்சான்... இந்தக் காலத்திலே எந்த வேலையும் செஞ்சுப் பொழைக்கலாம்... அதுலே என்னா கேவலம்! வேணும்னா சொல்லு; நம்ம நாயுடு வூட்லே இன்னும் ரெண்டு வண்டி புதுசா வருது... ஒனக்கும் ஒண்ணு வாடகைக்குப் புடிச்சி தர்றேன்."

"சே... சே... நா மாட்டேன்; வந்த வழியெப் பார்த்துக்கினு ஊருக்குப் போறேன்."

"ஐய, அவனெப் புடிச்சிக்கிட்டு நீயேன் வம்பு குடுக்கிறே... என்னமோ வந்தான்... ரெண்டு நாளுக்கு இருந்துட்டுப் போறான்" என்று தன் தம்பிக்குப் பரிந்து பேசினாள் பூங்காவனம்.

★ ★ ★

"டேய்... மச்சான், எங்கூட வர்ரியா பட்டணமெல்லாம் சுத்திக் காட்றேன், உம்... நீதான் ராத்திரிக்கு ஊருக்குப் போறியே; சரி... ஏறு வண்டியிலே அந்தப் பக்கம்தான் போறேன்..."

"சீ... என்னெ ஒக்காரவெச்சி மாமன் இழுக்கிறதா?" என்று நினைத்துச் செல்லப்பன் தயங்கினான்.

"வேணாம்... நா நடந்தே வர்றேன்..."

"டே... ஏர்ரா... எந்தெந்தப் பசங்களெயெல்லாம் நா ஏத்திக்கினு போறேன். ஒன்னெ ஏத்திக்கினா என்னாடா? உம்... சும்மா ஏறி உக்காரு..."

வண்டியில் ஏறி உட்காரும்பொழுது செல்லப்பனுக்கு உடல் குன்றி உள்ளமெல்லாம் கூசியது.

'லைட் ஹவுஸ்' பார்க்க செல்லப்பனை விட்டுவிட்டு அதற்குள் எங்கோ ஒரு சவாரி போய்விட்டு மீண்டும் ஹைகோர்ட் அருகே மரத்தடியில் வந்து நின்றான் மருதையா.

உள்ளே சென்ற செல்லப்பன் இன்னும் வெளியே வரவில்லை.

மருதையனுக்கு அருகே யாரோ ஒரு மனிதர் பேப்பர் படித்துக்கொண்டு நின்றிருந்தார்... உள்ளிருந்து வருவோரையும் பேப்பரையும் மாறி மாறி அவர் பார்ப்பதிலிருந்து அவரும் யாருக்காகவோ காத்திருக்கிறார் என்று தெரிந்துகொண்டான் மருதை.

"என்னா சார்... யாருக்கோசரமாவது காத்துக்கினு இருக்கிறியா..." என்று பேச்சுக் கொடுத்தான்.



"ஆமா... பொண்டுவ போயிருக்காங்க இன்னாங் காணமே" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் பேப்பரில் பார்வையை ஓட்டினார் அந்த ஆசாமி.

"என்ன சார் பேப்பர்லே விசேஷம்...? சண்டெ வருமா...?"

"உம்... நம்ம இந்தியாவுலே வராது..."

"மந்திரிங்க எதனாச்சும் பேசி இருக்காங்களா சார்..."

"ஓ... பேசி இருக்காங்க. இந்த ரிக்ஷா வண்டியெல்லாம் எடுத்துப் புடணுமின்னு கூடப் பேசி இருக்காங்க..."

"என்னா சாமி...? என்னா..."

"மனிதனை மனிதன் சுமந்து செல்லும் ரிக்ஷா வண்டிகள் மிகவும் அநாகரீகமானவைகள் தான்னு ஒரு மந்திரி பேசி இருக்கார்" என்று பேப்பரில் இருந்த வாசகத்தைப் படித்துக் காட்டினார் அவர்.

"அது என்னா சாமி எப்பப் பார்த்தாலும் இப்படிப் பேசிக்கினே இருக்காங்க?... நானும் ரொம்ப தடவை கேட்டுப்புட்டேன். இல்லே... நான்தான் கேக்கறேன்... மாட்டு வண்டி ஒஸத்தியா... குதிரை வண்டி ஒஸத்தியா? சொல்லு சாமீ..."

"குதிரை வண்டிதான்..."

"அப்படின்னா மனுசன் மாட்டையும் குதிரையையும் காட்டியும் மட்டமாவா பூட்டான்? மாடு வலிக்கிறதெங்காட்டியும் குதிரை வண்டி ஒஸத்தின்னா மனுஷன் இஸ்கற வண்டி எல்லாத்தியங்காட்டியும் ஒஸத்தி இல்லியா சாமீ..." அந்த மனிதருக்குப் பதில் சொல்ல முடியவில்லை... சிரித்தார்.

லைட் அவுஸுக்குள்ளிருந்து செல்லப்பனும் வந்து விட்டான்.

செல்லப்பனை ஏற்றிக்கொண்டு அவன் புறப்பட்ட நேரத்தில் "ஏ! ரிக்ஷா" என்ற குரல்கேட்டுத் திரும்பினான்.

"ராயபுரத்துக்கு வர்ரியா."

"இல்லே, எம்மச்சானெ ரெயிலுக்கு ஏத்திக்கினு போறேன்" என்று சிரித்தான் மருதை!

வண்டி எர்ரபாலு செட்டித் தெருவில் வந்து கொண்டிருந்தது. பெரிய பெரிய பேல்களையும் மூட்டைகளையும் ஏற்றிய கட்டை வண்டிகளையும் மூன்று நான்கு பேராய் வியர்வை கசிந்து கசிந்து உடலெல்லாம் வழிய,

"ஏறு... ஹம்... தள்ளு... அடி... அடி..." என்று பெருஞ்சப்தமிட்டுக் கொண்டு தள்ளி வருவதையும் செல்லப்பன் கண்டான். "டே... மச்சான்... இது தேவலாமாடா?" என்றான் மருதை.

"பின்னே என்ன மாமா? இது எவ்வளவோ தேவலாமே..." என்றான் செல்லப்பன்.

மருதை சிரித்தான்.

"டேய்... எல்லாச் சொமையும் ஒன்னுதானே."

"அதில்லே மாமா. என்னா இருந்தாலும் ஒரு மனுசனை வெச்சி இன்னொரு மனுஷன் வலிச்சிக்கினு போறதுன்னா கேவலந்தான்."

"டேய் மச்சான், நம்ம வண்டியிலே எதெ வெச்சி இஸ்த்தாலும் பாரம் பாரந்தான்; அதிலே எதுக்கு இது மனுஷன் பாரம் இது மூட்டெ பாரம்னு நெனைச்சிக்கனும்? என்னமோ ஒரு மூட்டென்னு நெனச்சிக்கறது. அவங்களெ மனுஷனா மதிச்சாத்தானே நமக்குக் கேவலம்? நம்பளை மனுசன்னு மதிக்காமெ நம்ம முதுவு மேலே ஒக்காந்திக்கிறவங்களை நாம்ப ஏன் மனுசன்னு நெனைக்கனும்?"...



ஒருகணம் செல்லப்பன் யோசித்தான். வண்டி 'பிராட்வே'யில் வந்து கொண்டிருந்தது.

"மாமா ரிக்ஷாவெ நிறுத்து" என்றான். மருதையா ஒன்றும் புரியாமல் வண்டியை நிறுத்தவே, கீழே குதித்த செல்லப்பன் 'நா நடந்து வர்ரேன் மாமா" என்றான்.

"என்னடா மச்சான் திடீர்னு?"

"அதுவா மாமா, நா மனுசன் அதனாலே" என்று 'பளிச்'செனக் கூறினான் செல்லப்பன்.

மருதையா சப்தம் போட்டுச் சிரித்தான்.

* * *

மறுநாளிலிருந்து செல்லப்பனும், தன் மாமனைப் போலவே 'ரிக்ஷா வலிக்க' ஆரம்பித்துவிட்டான்!

தார் ரோட்டில் வியர்வைத் துளிகள் சிந்தித்தெறிக்க ஓடி ஓடி உழைத்தான். ஆமாம். அவன் அகராதிப்படி ரிக்ஷாவை இழுத்தால் மனிதன்தான்... ரிக்ஷாவில் சவாரி செய்பவர்களைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை.

– – –

# ௨. கண்ணன் பிறந்தான்

‘சடகோபன்... ஆறாம் வகுப்பு, ஜில்லா போர்ட் பாடசாலை’ என்று தலைவர் அழைத்ததும் கூட்டத்தில் சில வினாடிகள் ‘சலசல’ப்பு.

“பாடு... அம்பி...” என்று தலைவர் சிறுவன் முதுகில் தட்டிக் கொடுக்கிறார். ‘கணீ’ரென்று சிறுவனின் குரல் ஒலிக்கிறது.

“புள்ளும் சிலம்பினகாண்...
புள்ளரையன் கோயிலில்...
வெள்ளை விளிசங்கின்...
பேரரவம் கேட்டிலையோ”

அண்ணாசாமியென்ற ஓர் உருவம் திகைக்கிறது! கண்ணீர் வடிக்கிறது. ‘கண்ணா கண்ணா’வென்று இதயம் ஓலமிட்டு விம்மி விம்மி அழுகிறது. ஐயோ!... ‘அதே அடிகளை’ப் பையன் பாடுகிறான்; பக்தர் குழாம் ரசிக்கிறது!

மார்கழி மாதம் கடைசி நாளில் வழக்கம்போல் ராமாபுரம் பெருமாள் கோயிலில் திருப்பாவை விழா. சிறுவர்களின் பாடல் போட்டி



நிகழ்ச்சி ஆரம்பமாகி விட்டது. ஜனத்திரள் நெரிகிறது. ஜில்லா போர்ட் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் அனந்தசயனம் தலைமை வகிக்கிறார். அவர் அருகே பாகவதர் அண்ணாசாமி சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார்.

கடந்த ஓராண்டு காலமாக பாகவதர் அண்ணாசாமி, பெருமாள் கோயில் பக்கம் திரும்பியதுகூட இல்லையென்றால் அவ்வூர்வாசிகள் நம்ப மாட்டார்கள்... என்றாலும் அதுதான் உண்மை! அவர் நெற்றி இப்பொழுதும் வெறிச்சென்றுதானே இருக்கிறது? நாராயணாவென்னும் நாமத்தை உச்சரித்து ஆண்டு ஒன்றாகிவிட்டது! ‘நான் மறவேன் நாராயணாவென்னும் நாமம்’ என்று சொன்னதெல்லாம் பொய்த்துவிட்டது! நாராயணனை மறப்பது இருக்கட்டும்; தன்னையே மறந்து சிலையாகிவிட்டிருந்தார் அண்ணாசாமி! சிறுவனின் பாடலில் அவர் மனம் பதியவில்லை... எங்கோ ஓடுகிறது. யாரையோ தேடுகிறது!

★ ★ ★

போன வருஷம்...

மார்கழி மாதம்! வைகறை நேரம்!... பனி மூட்டம் பார்வையை மறைக்கிறது. காவேரியாற்றங் கரையில் வரிசை வரிசையாக ஆண்களும் பெண்களும் போகிறார்கள்; வருகிறார்கள். வெள்ளி முலாமேறிய கீழ்வானத்தில், கதிரவனின் ஒளிக் கதிர்களை நோக்கிப் பறவையினங்கள் கூட்டம் கூட்டமாகப் பறக்கின்றன!

கிராமத்து அக்ரகாரத்தின் மேலண்டைபுரத்தில் பெருமாள் கோயிலை அடுத்த அழகிய தென்னஞ்சோலை! தெருக்கோடியில் ஒரு பழைய ஓட்டு வீடு! அந்த வீட்டின் பின்புறம்- தோட்டத்தில் இரு உருவங்கள் பனிநீரில் நனைந்த மலர்களைக் கொய்த வண்ணம் கம்பீரமும், குழைவும் கலந்த குரலில் பாடுகின்றன. பாகவதர் அண்ணாசாமியும் அவர் மகன் கண்ணனும்தான்!

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி...
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து... ...
சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்..."

பாடலை நா உச்சரிக்க கரங்கள் மலர் கொய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. பூக்கொய்தாகிவிட்டது.

"கண்ணா..."

"என்னப்பா..."

"இன்னிக்குத் திருப்பாவை போட்டியிலே பேர் குடுத்திருக்கிறாயோ?"

"ஓ..."

மலர் நிறைந்த பூக்குடலையைத் தோளில் தொங்க விட்டுக்கொண்டு 'ஆழி மழைக்கண்ணா...' என்று மீண்டும் குரல்கள் இனிமையோடு இழைய இருவரும் வீட்டிற்குள் நுழைகின்றனர்.

"வென்று பகை கெடுக்கும்
நின்கையில் வேல்போற்றி
என்றென்று உன்கையில்
ஏந்திப்பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம்
இரங்கேலோ ரெம்பாவாய்"

என்ற பெண்ணின் குரல் வீட்டகத்தே இருந்து மதுரமாக ஒலித்தது.

"அப்பா பூப்பறிச்சுட்டேளா நாழியாச்சு சீக்கிரம் கொண்டு வாங்கோ தொடுத்துடறேன்..." என்று சொல்லிக்கொண்டே சிறுவனிடம் இருந்த



பூக்குடலையை வாங்கினாள் பதினாறு வயதுடைய அவர் செல்வமகள் ஆண்டாள்.

அந்த மூவரையும் கொண்டது அவ்வேழைக் குடும்பம்.

தொடுக்கப்பட்ட மலர் மாலையைக் குடலையில் போட்டுக்கொண்டே 'ஆச்சு போகலாமா கண்ணா' என்றவாறு தன் தம்பியைக் கனிவோடு நோக்கினாள். சிறுவனின் முகம் வாடியிருந்தது! தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்... கண்களில் நீர் சுரந்தது. தலை குனிந்தான். அவன் கண்ணீர் தரையில் சிந்தித் தெறித்தது!

"கண்ணா... கண்ணா ஏன்டா அழறே" என்று ஆதூரத்துடன் அவனை அணைத்துக் கொண்டாள்.

"பசிக்கிறது... அக்கா" என்று சிறுவனின் தொண்டை கரகரத்தது.

தோட்டத்து வாசலில் நின்றிருந்த பாகவதர் அண்ணாசாமி பின்புறமாகத் திரும்பி அடுக்களையில், இரண்டு நாட்களாக ஈரம் படாமல் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் சோற்றுப் பானையைப் பார்த்தார்.

"வாடா கோயில்லே பிரசாதம் கொடுப்பா" என்று அவன் கண்ணீரைத் துடைத்து அழைத்துச் சென்றாள் ஆண்டாள்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" என்று இதயபூர்வமாக ஜெபித்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றனர் மூவரும்.

ஆகா!... அந்தப் பாடல்களில்தான் எத்தனை இன்பம்! அந்த இன்பத்தில்தான் அவர்கள் வாழ்கின்றனர். அந்த இன்பம் மட்டும் போதுமா?

அண்ணாசாமி ஐயங்கார், மன்னார்குடி தாலுக்காவில் மிகவும் பிரபல்யமானவர். அவரது காலக்ஷேபங்களும் உபன்யாசமும் அனைவருக்கும் தெரியும். அவர் எப்படிக் 'காலக்ஷேபம்' செய்கிறார்

என்பது யாருக்கும் தெரியாது. உபன்யாசகர் உபவாசகராக இருப்பதைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை? அவர் வாக்கு வளத்தில் மெய் சிலிர்த்தவர்கள் அவர் வாழ்க்கை வளத்தைப் பார்த்து மனம் நோகவில்லை!

அவர் ஆண்டவனின் தொண்டர்! யார் கையையும் எதிர் பார்த்தாரோ, இல்லையோ, 'ரெண்டுநாளா பட்டினி' என்று ஒருவரிடமும் சொல்லாமல் நாராயணா வென்னும் நாமத்தை ஜெபித்துக்கொண்டு, திவ்யப் பிரபந்தப் போதையில் ஆழ்ந்திருந்தார். தன் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் காற்றையும் நீரையும், எப்பொழுதோ சில நாட்களில் கொஞ்சம் உணவையும் உண்டு உயிர்வாழக் கற்றுக் கொடுத்திருந்தார். அவர் வீட்டில் இரண்டு நாட்களுக்கொரு முறை அடுப்பு எரிவதே நாராயணன் அருள் என்று அவர் நம்பினார்; அந்த அருளில் அக மகிழ்ந்தார்.

அவர் மனைவி அலமேலு இரண்டு வருஷங்களுக்கு முன்தான் இறந்தாள். வறுமை இருள் சூழ்ந்த ஜீவிதம் அவளை உதறி எறிந்தது! தன் கணவன் 'பற்றற்ற ஞானி' என்பதை அறிந்தும் அந்தக் குழந்தைகளை அவரின் ஏக பராமரிப்பில் விடுத்து, தான் மட்டும் நிம்மதியாக நாராயணனின் பாதார விந்தங்களில் அடைக்கலம் புகுந்தது, தான் பெற்ற செல்வங்களுக்கு அவளிழைத்த துரோகம்தான்!

அவருக்கு யாரும் என்றும் சுமையாக இருந்ததில்லை. 'அவன் பிறப்பித்தான், ரக்ஷிப்பது அவன் கடன்' என்ற திடசித்தத்தில் கலக்கமின்றி வாழ்ந்தார்.

பிள்ளையையும் பெண்ணையும் தம் பக்தி வழியில் நடை பயில, பக்குவப்படுத்தி இருந்தார்.

'அக்கா சாதம் சாப்பிடணும்' என்று கண்களில் நீர் ததும்ப கையிலிருந்த சுண்டலைப் பார்த்துக் கொண்டே கூறினான் கண்ணன்.

"சாயங்காலம் அரிசி வாங்கி சமைக்கலாம்... இப்போ இதை சாப்பிடுடா" என்று தன் கையிலிருந்த பிரசாதத்தையும் அவனிடம் கொடுத்தாள் ஆண்டாள்.



'அக்கா நோக்குப் பசிக்குமே'

"இல்லேடா; நான் வாழைப்பழம் சாப்பிட்டேனே" என்று புளுகினாள். அவள் கண்கள் கலங்கின.

"அக்கா நாம 'சாமிசாமி'ன்னு பாடிண்டிருக்கோமே, சாமி ஏன் நம்மைப் பட்டினி போடறார்?..." அவன் கேள்வியில் என்ன ரௌத்திரம்!

"பக்தர்களை சுவாமி அப்படித்தான் சோதிப்பார்..."

"நம்ம பக்தியை சுவாமிகூட சோதித்துத்தான் தெரிஞ்சுக்கணுமா?..."

"தம்பீ..."

"பின்ன என்னடீ... நான் எவ்வளவு பூப்பறிச்சு ஜெபம் பண்றேன்... இந்தப் பாழாப் போன சாமிக்கு..."

"தம்பீ..." என்றவாறு அவன் கன்னத்தில், பளீரென அறைகிறாள்...

வாயில் சுண்டலும் பிரசாதமும் அடைக்க விக்கி விக்கி அழுகிறான் கண்ணன்...

"தம்பீ... அபச்சாரமா பேசலாமோடா, தெரியாமெ அடிச்சுட்டேன். மன்னிச்சிக்கோடா அழாதேடா, கண்ணா அழாதேடா. என்னெ வேணுமானா திருப்பி அடிச்சுடு, அழாதேடா கண்ணா" என்று அவனை அணைத்துக்கொண்டு ஆறுதல் கூறி அழுகிறாள்.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் 'பொலபொல'வென உதிர்ந்தது. அவன் அவளுடன் பேசவேயில்லை!

"சுவாமி... என் தம்பியை மன்னிச்சுடு..." என்று ஆண்டாளின் மனம் பிரார்த்தித்தது!

* * *

அன்று கோயிலில் திருப்பாவைப் போட்டி! ஜில்லா கல்வி அதிகாரி ராமாமிர்த ஐயங்கார் தலைமை வகித்தார். குழந்தைகள் பாடின.

மழலைக் குரல் கேட்போரின் மனத்தை மயக்கிற்று! சின்னஞ்சிறு குழந்தைகள் திக்கித் திக்கிப் பாடின. பெரிய குழந்தைகளின் 'கணீ'ரென்ற குரல் இடையிடையே ஒலிக்கிறது. பக்தர் குழாம் சிரக்கம்பம் செய்கிறது!

"அடுத்தபடியாக பாகவதர் அண்ணாசாமி ஐயங்காரின் புத்திரன் கண்ணன், ஐந்தாம் வகுப்பு, ஜில்லா போர்ட் பாடசாலை..." என்று தலைவர் அழைத்தவுடன் கூட்டத்திலிருந்து தள்ளாடியவாறே வந்து நின்றான் கண்ணன்.

பசி, களைப்பு... வாடிய முகம்; நெற்றியில் மொட்டை நாமம் 'பளீ'ரிடுகிறது. வாரி முடிந்த குடுமிச் சிகை பளபளக்கிறது!

கண்ணன் தொண்டையைச் செருமினான். குரல் கம்மி அடைத்தது! சட்டையில்லாத மார்பில், நெஞ்சுக் கூட்டின்மேல் சரிந்து கிடந்த பூணூலைத் திருகிக் கொண்டே நின்றிருந்தான். தொண்டை வரவில்லை...

"கண்ணா... நாழியாச்சு... உம்..." என்று அண்ணாசாமி அதட்டினார்.

'கணீ'ரெனச் சிறுவனின் குரல் ஒலித்தது!.

*"புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்*
*வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ"*

என்று ஆரம்பித்து...



*"மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் உள்ளம்*
*புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்..."*

என்று முடித்ததும் எல்லோருடைய உள்ளமும் குளிர்ந்தன. பெருத்த கரகோஷத்தால் சிறுவனின் செவிகளும் குளிர்ந்தன. ஆனால் வயிறு!...

"பாகவதர் மகனோல்லியோ?" என்ற குரல் காதில் விழும்போது அண்ணாசாமிக்குத்தான் என்ன மகிழ்ச்சி! ஆண்டாள் பூரித்துப் போனாள்.

போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு மறுநாள் மாலை பரிசளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது... கூட்டம் கலைந்தது.

கூட்டம் கலைந்து பாகவதரும் ஆண்டாளும் புறப்படும்போது அவர்களுடன் வந்த கண்ணனைக் காணவில்லை! பாகவதர் தேடிப் பார்த்துவிட்டு 'வீட்டுக்குப் போயிருப்பான்' என்று எண்ணிக் கொண்டார்.

கோவிலின் வெளிப் பிரகாரத்தில் வடகோடியில் இருப்பது பஜனை மடம். அதன் சார்பில் நடப்பவைதான் மார்கழி மாத விழாக்கள் அனைத்தும்.

பஜனை மடத்திற்குள் சுவரருகே ஐந்தடி உயரத்திற்கு ஆண்டாளின் திருவுருவப் படம். அதனருகே வெண்கல விளக்கொன்று மங்கிய ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. திருவடிகளுக்குச் சமர்ப்பணமாக வாழைப் பழங்கள், தேங்காய்கள், கற்கண்டு, சுண்டல், இத்யாதி...

ஆண்டாள் திருவுருவின் மீது நிழல் அசைகிறது. அந்த வழியாக வந்த அண்ணாசாமியும் ஆண்டாளும் ஒரு வினாடி நிற்கின்றனர்.

அடுத்த கணம் நிழலின் கரத்தில் உரிக்கப்பட்ட வாழைப்பழங்கள் மறைகின்றன. தேங்காயைப் பல்லால் சுரண்டுவதும் தெரிகிறது.

அண்ணாசாமி மெள்ள பஜனை மடத்திற்குள் நுழைகிறார்.

'ஆ!... கண்ணா?' வென்று அலறுகிறார்.

'அப்பா...'

"அப்பாவா? ... இங்கே வாடா... திருட்டு நாயே..." என்று சொல்லிக்கொண்டே அவன் மீது பாய்ந்து முதுகில் பேய் போல அறைகிறார்.

'அப்பா... இல்லேப்பா' என்று சிறுவன் அலறுகிறான். ஒரே கூட்டம். ஆண்டாள் மௌனமாக அழுகிறாள். எல்லோரும் விஷயம் புரியாமல் திகைக்கிறார்கள். அண்ணாசாமி கோபத்துடன் வீட்டை நோக்கி விரைகிறார். தம்பியைத் தேற்றி வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாள் ஆண்டாள்.

* * *

மாலை நேரம்.

கோவிலில் ஜனப்பிரளயம். ராமாமிர்தம் ஐயங்கார் திருப்பாவை மாநாட்டுப் பந்தலில் தலைமை ஆசனத்தில் கம்பீரமாய் வீற்றிருக்கிறார்.

பாகவதர் அண்ணாசாமி ஐயங்கார் மேடையில் நிற்கிறார். அவர் கழுத்தில் மலர் மாலை. மனசில் பக்தி வெறி. அதோ, கூட்டத்தில் முன் வரிசையில் உட்கார்ந்திருக்கிறாளே, ஆண்டாள். அவள் வயிற்றில் பசி-பட்டினிப் புழு குடைகிறது.

*"மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
*மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்."*

என்று பாடிக்கொண்டு தன்னை மறந்து அண்ணாசாமி ஆடினார். பக்திப் பிரவாகத்தில் நீந்தினார். பக்தர்கள் ரசித்தனர். அண்ணாந்து கேட்டனர். 'அழகு அழகு' என்றனர். அதன் பிறகு? 'சுண்ணாம்புக் கதை'தான்...



ஒருமணி நேரத்திற்குப் பின் அவர் உபன்யாசம் முடிந்தது.

'ஆண்டாள் திருவடிகளே சரணம்' என்று கூறி அவர் முடித்ததும் காது செவிடு படும்படி கரகோஷம். அவர் செவிகள் அடைத்துக்கொண்டன. பசி இருள், கண்களை மறைத்தது.

சிறுவர் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்குப் பரிசளிக்க தலைவர் எழுந்து நின்றார்.

"கண்ணன், ஐந்தாம் வகுப்பு, பஞ்சாயத்து போர்ட் பாடசாலை... முதல் பரிசு இருபது ரூபாயும் திவ்விய பிரபந்தத் திரட்டு என்ற புத்தகமும் முதற்பரிசாக அளிக்கப்படுகிறது!" என்று அறிவித்தவுடன் ஜனக் கூட்டம் ஆரவாரித்தது.

"கண்ணன்... கண்ணன்..." என்று பலர் கூவினர். கண்ணனைத்தான் காணோம்!

'கண்ணா கண்ணா'வென்று அலறியவாறு ஆண்டாள் வீட்டிற்குள் ஓடினாள். அங்கேயும் கண்ணனைக் காணவில்லை.

"கண்ணா... கண்ணா..." வெற்றிடங்களைப் பார்த்துப் பித்துப் பிடித்தவளைப் போல் கூவினாள் ஆண்டாள்.

பூஜையறையில் ராமர் படத்துக்கடியில் ஒரு காகிதம் இருந்தது. கண்ணன் எழுதிய கடிதம். மணி மணியான எழுத்துக்கள்.

"அம்மா மேலே சத்தியம் பண்ணி இந்தக் கடிதாசியை எழுதறேன். என் அம்மா செத்ததிலிருந்து எனக்கு ஆதரவில்லாம ஆயிடுத்து. ரெண்டு நாளா நான் பட்டினி கெடக்க என் அம்மா இருந்தா மனம் பொறுப்பாளோ? நான் பட்டினியிலே துடிக்கறச்ச என்னை நீங்க யாரும் கவனிக்கலே... காலையிலே அக்கா அடிச்சா... இப்போ அப்பா அடிக்கறார்... நான் பட்டினியும் பசியுமா

இவங்கள்ட்டே அடியும் ஒதையும் வாங்கிண்டு எப்படி இருக்கறது? எங்கம்மா இல்லாத இந்த வீட்டிலே எனக்கு என்ன வேலை... நான் போறேன். எங்கேயோ? எங்கேயோ போவேன்... உங்களுக்கென்ன? சுவாமிதான் என்னைக் காப்பாத்தணும். என்னிக்காவது நான் நல்ல நிலையிலே இருந்தேன்னா-ஒரு நாள் திரும்பி வருவேன். ராமா! என்னைக் காப்பாத்து! நான் போகிறேன்!"

*- கண்ணன்*

"ஐயோ! கண்ணா... கண்ணா" என்று அவள் கதறினாள். அப்பொழுதுதான் அண்ணாசாமி வந்தார். கடிதத்தைப் படித்தார். கண் கலங்கிக் கண்ணீர் வழிந்தது! கடிதத்தால் முகத்தை மூடிக்கொண்டு 'ஐயோ கண்ணா'வென்று விக்கி விக்கி அழுதார் அண்ணாசாமி!

அதன் பிறகு சில மாதங்களுக்கெல்லாம் ஆண்டாள் அவருக்குப் பாரமாக இருந்தாள். அவருக்குக் குடும்பக் கவலை வந்துவிட்டது!

எப்படியோ கஷ்டப்பட்டு ஆண்டாளை மேல அக்ரஹாரத்துப் பார்த்தசாரதி ஐயங்கார் மகன் சீமாச்சுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டார். கண்ணனால் அவருக்குக் குடும்பப் பொறுப்பே உண்டாயிற்று.

சீமாச்சு, பெருமாள் கோயில் குருக்கள். எப்படியோ 'காமா சோமா'வென்று கல்யாணமாகி இப்பொழுது ஆண்டாள் கர்ப்பமாகவுமிருக்கிறாள்... இதுதான் மாசம்.

கல்யாணத்தன்று முழுதும் ஆண்டாள், கண்ணனை எண்ணியெண்ணி அழுதாள். தினசரி ஒருமுறையாவது தன் தம்பிக்காக அவள் அழுவது சம்பிரதாயமாகி விட்டது.



அண்ணாசாமிக்குக் கண்ணீர் வற்றிப்போய் விட்டது. பக்தி வெறி தணிந்துவிட்டது! 'கண்ணா கண்ணா'வென்ற இதய ஓலம் மட்டும் நின்றபாடில்லை.

'என்னைக்கோ திரும்பி வருவானாமே, என்று வருவான்? என் கண்ணன் என்று வருவான்?' என்று மனம் ஏங்கியது. 'என்றோ வருவான்' என்ற நம்பிக்கையில் வாழ்க்கை நகர்ந்தது.

* * *

அடுத்த ஆண்டு — மார்கழி மாதம் திருப்பாவை விழா!

ஜில்லா போர்ட் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் அனந்தசயனம் தலைமை வகிக்கிறார். 'நீங்க வந்து ரெண்டு வார்த்தை சொல்லிவிட்டுத்தான் போகணும்' என்று கட்டாயப்படுத்தியதினால் அண்ணாசாமி விழாவுக்கு வந்திருந்தார். ஆனால் மனம் எங்கோ சுழன்றது.

"சுவாமிகளே ஆத்திலேருந்து ஆள் வந்திருக்கு" என்ற குரல் அவர் சிந்தனையைக் கலைத்தது.

"என்ன" என்று உறக்கத்திலிருந்து விழித்தவரைப் போல் திரும்பினார்.

சீமாச்சு நின்றிருந்தான்!

"ஆண்டாளுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு, ஆத்துக்கு வாங்கோ."

"கண்ணன் பிறந்துவிட்டான் சீமாச்சு, நம்ம கண்ணன் பிறந்துட்டான்" என்று கத்தினார் அண்ணாசாமி.

- - -

# 3. பால் பேதம்

‘கிர்... கிர்’ என்ற சப்தத்துடன் கிணற்று ராட்டினம் இழுபட்டது.

தொழுவிலிருந்த மரத் தொட்டியில் ஒரு வாளித் தண்ணீரை இரைத்துக்கொட்டி, ஒரு பானைக் கழுநீருடன் நாலு கை துவரம் பொட்டையும் போட்டுக் கலக்கினாள் வேலம்மாள்.

கழுநீரின் புளிப்புடன் துவரம் பொட்டும் கலந்து குழம்பி நுரை கிளப்பி ஏதோ ஒரு சுகந்தம் கிளப்பிற்று...

சுகந்தமா! - ஆம்; இடைச்சி வேலம்மாளுக்குத்தான் அது தெரியும்.

‘மூஸ், மூஸ்’ என்ற வெப்பமான ஸ்வாசமும் புழுதியும் அவள் முதுகுப்புறத்தில் படிந்தன.

முளையில் கட்டிய கயிறு கழுத்துப் படுதாவில் இறுக்க, திமிறிக்கொண்டு அவள் கணுக்காலை வாஞ்சையுடன் நக்கிக் கொடுக்கும் ‘லட்சுமி’யைக் கண்டவுடன் வேலம்மாளின் மனசுக்கு என்னவோபோல் இருந்தது.



லட்சுமி அழகான பசு - வெறும் வெள்ளை நிறம் தான் அழகா? வலது தொடையின் மேல் பக்கத்தில் கறுப்புத் திட்டு ஒன்று நீண்டு முதுகுவரை படர்ந்திருந்தால் அது அழகில்லையா, என்ன? - அதுவும் அழகுதான்!

லட்சுமிக்குப் பேசத் தெரியாது என்றுதான் வேலம்மாள் சொல்லுவாள். அதன் கண்களை உற்றுப்பார்த்தால் - பேச்சா? பேசாத பேச்சுக்கள், உணர்த்தாத உணர்ச்சிகள் எத்தனையெத்தனையோ புலப்படும்.

மறுபடியும் கழுத்தை வளைத்து அவள் காலை நக்கிற்று லட்சுமி.

“என்னா இவ்வளவு அவசரம்? ஒனக்குத்தானே கலக்கறேன், நானா குடிக்கப்போறேன்?” - தனக்குள் செல்லமாக முனகிக் கொண்டே தொழுமுளையில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தாள் வேலம்மாள்.

மறுகணம் தொட்டியில் தலையைப் புதைத்துக்கொண்டு ‘புர்’ரென்று கழிநீரை இழுக்க ஆரம்பித்தது பசு.

“ம்...ஆவ்...” என்று தலையை உயர்த்திக் கத்தியது லட்சுமியின் கன்று.

வேலம்மாளுக்கு மார்பில் என்னவோ கிளுகிளுத்தது. கன்றை அவிழ்த்துத் தாயினருகே கொண்டு வந்தாள்.

புழக்கடைத் தாழ்வாரத்தின் உத்தரத்தில் கட்டித் தொங்கும் தூளியில் உறங்கிக் கொண்டிருந்த வேலம்மாளின் ஆறு மாதக் குழந்தை உடம்பை முறித்துக்கொண்டு ‘குவா குவா’ என்று அழ ஆரம்பித்தது.

அவ்வளவுதான் வேலம்மாள் ஒரே எட்டில் தாழ்வாரத்துக்குப் பாய்ந்தாள்; தூளியில் கிடந்த குழந்தையை வாரியெடுத்தாள்.

“ஒண்டிம்மா நீ அவ்வுறது? ... இம்மா நாளி தூங்கினியாடி... அம்மாவுக்கு வவுத்தைப் பசிக்குதா? ... அதுக்கு நீ இப்பிடி அவ்வுளாமாடி

அவ்வாதேடி, எம் பட்டு, எஞ்செல்லி…" என்று 'தாய் மழலை'யில் கொஞ்சி ஒரு கையால் குழந்தையை அணைத்து முத்தம் சொரிந்து கொண்டிருக்கும்போதே அவளை அறியாமல் அவளது மறு கை ரவிக்கை முடிச்சை அவிழ்த்தது.

பால் நரம்புகள் புடைத்துப் பருத்த முலைக் காம்புகளில் வெண்முத்துப் போல் ஈரம் கசிந்திருந்தது.

உணர்விழந்த உணர்ச்சிப் பரபரப்போடு குழந்தையின் முகத்தை மார்பில் வைத்து அழுத்தினாள் வேலம்மாள். நெஞ்சில் புகுவதுபோல், மார்பில் முட்டி முட்டி முலை சுவைத்தது சிசு. குழந்தையின் ஒவ்வொரு உதைக்கும் வேலம்மாளின் நெஞ்சில் பால் சுரந்தது; ஒவ்வொரு முட்டுக்கும் மார்பில் ஸ்வாசம் அடைத்தது…

தோட்டத்து வாசற்படி நிலையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். வேலம்மாளுக்குக் கண்கள் ஏறிச் செருகின. தன்னை மறந்த லயம்… ரவிக்கை அவிழ்ந்து நிலை குலைந்து சரிந்து கிடக்கும் ஸ்தனபாரங்களுக்கிடையே ஆர்வத்துடன் நீந்திக் கொண்டிருந்தது அவள் குழந்தை!

– ஆஹா! என்ன சுகம், என்ன சுகம்!

கழுநீரைக் குடித்துக் கொண்டிருந்த 'லட்சுமி' தலை நிமிர்த்தி அந்தக் காட்சியை ஏறிட்டுப் பார்த்தது.

– அப்பொழுது அதன் கரிய விழிகளில் ஒரு ஒளி, ஸ்வாசத்தில் ஒரு படபடப்பு!..

முட்ட முட்ட நீரைக் குடித்த அதன் வயிற்றினடியில் ஓடும் பால் நரம்புகள் புடைத்தன. நரம்புக்குழாயின் முடிவில் பெருந்தொடைகளின் நடுவில், தாமரை மலர் போல் தொங்கிக் கொண்டிருந்த பால் மடி கனத்துப் பூமியை நோக்கி இழுத்தது.

பால் காம்புகள் விம்மிப் புடைத்தன. அந்தப் பூரிதத்தில், காம்பிலிருந்த ஒரு கரும்புள்ளியில் – மச்சத்தில் – வெள்ளைக் கோடுகள் விழுந்து பரந்தன.



'ஹம்மோ…வ்!' பசுவின் வயிறு உள்வாங்கி, பால் மடி ஒரு குலுங்கு குலுங்கிற்று.

– வேலம்மாளுக்குச் சுயநினைவே இல்லை.

பசுவின் கால்களுக்கிடையில் தலையை நுழைத்து மடியில் வாய் வைத்து, அரும்பிய பற்களையும், நாக்கையும் ஒன்று கூட்டிப் பதித்து, தலையால் இடித்து முட்டித் துள்ளியது கன்று.

தோட்டத்துப் படலைத் திறந்து கொண்டு வேலம்மாளின் புருஷன் ஆண்டிக்கோனான் உள்ளே வந்தான்.

"என்னடி நீ பிள்ளைக்குப் பால் கொடுக்கற லட்சணம், கன்றுக்குட்டியெ ஊட்டவுட்டுட்டு…"

தோள்மீது கிடந்த கயிற்றைக் கன்றின் முதுகில் வீசினான் அவன்.

சுளீர்… ஒன்று – சுளீர்… இரண்டு…!

– வேலம்மாள் பதறி எழுந்தாள், கன்றைப் பிடித்து முளையில் கட்டத்தான்!

உதட்டில் சொட்டும் பாலுடன் முதுகில் பட்ட அடியால் துடித்தது கன்று.

## 2

ஆண்டிக்கோனான் மாட்டையும் கன்றையும் வாடிக்கைக்குப் பால் ஊற்றும் ஓட்டலுக்கு ஓட்டிச் சென்றான்.

வழியெல்லாம் கன்றுக்குட்டி அழுதுக்கொண்டே தாயைப் பின் தொடர்ந்தது.

'அம்மா! இந்தப் பாவி என்னெ அடிக்கிறானே!'

'அவன்தானடி நமக்குப் புல்லும் தண்ணியும் போடற எஜமான், அவனைத் திட்டாதே!' என்றது லட்சுமி.

'இவன் போடாட்டீ நமக்குக் கிடைக்காதோ? வேலம்மாகிட்டே அவ கொழந்தை பால் குடிக்கிறதை நீயுந்தானே பார்த்தே...? என்னை மட்டும் அடிக்கிறானே!

'இந்தா பாரு, நீ சிறு குழந்தை. ஒனக்கு இதெல்லாம் தெரியாது. வேலம்மா, அவ கொழந்தைக்கு மட்டுந்தான் அம்மா. நானோ உனக்கு மட்டுமில்லே. இப்போ உன்னை அடிச்சானே அவனுக்கும், வேலம்மாளுக்கும் எல்லாருக்கும் நான் அம்மாதான்!'

'என்ன இருந்தாலும் இந்த மனுசனுங்களுக்கு இருக்கிற சுயநலம்...'

'சீ, சும்மா இரு! ரொம்ப கண்டுட்ட மாதிரி கதை அளக்காதே. நானும் ஒரு காலத்திலே உன்னைப் போலக் கன்னுக் குட்டியா இருந்துதான் பசுவானேன் - நீ ரொம்பத் துள்ளாதே' என்று தன் கொம்புகளை ஆட்டிக் காண்பித்துப் பயமுறுத்திற்று லட்சுமி.

அதன் பிறகு கன்று தன் விதியை நொந்து கொண்டு மௌனமாகத் தாயைப் பின் தொடர்ந்தது.

ஓட்டல் வாசலில் பசுவை நிறுத்தி அதன் பின்னங்கால் இரண்டையும் சேர்த்துக் கட்டிவிட்டுப் பால் கறக்க ஆரம்பித்தான் ஆண்டிக்கோனான்.

'சொர்ங்...சொர்...'

தகரக் குவளையில் பால் பீச்சின் ஓசையைக் கேட்ட கன்றுக்குட்டியின் கண்கள் ஈரம் பரந்து மின்னின.

லட்சுமிக்குக்கூட மனசுக்குள் என்னமோ மாதிரியாகத் தான் இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை! வேலம்மாள் பசுவைக் குளிப்பாட்டினாள். லட்சுமியின் நெற்றியில் மஞ்சள் பூசித் திலகமிட்டாள். பசுவைச் சுற்றி வலம் வந்து விழுந்து கும்பிட்டாள். பசுவின் வால் நுனியைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். லட்சுமி தன் கன்றைப் பெருமிதத்துடன் பார்த்தது.

'பார்த்தியா, நான் அன்னக்கிச் சொல்லலே. இவர்களுக்கு நான் தாய் மட்டுமல்ல; தெய்வமும்கூட.'

அது என்ன சொல்லி என்ன? தன்னைப் பால் குடிக்க விடாமல் அடிக்கிறார்களே என்ற வருத்தம்தான் அதிகமாய் இருந்தது கன்றுக்குட்டிக்கு.

## 3

சில மாதங்களுக்குப் பின்...

தோட்டத்து வாசற்படி நிலையில் வேலம்மாள் உட்கார்ந்திருந்தாள். தாழ்வாரத்து உத்தரத்தில் தூளி இல்லை; குழந்தை இல்லை. அந்த நினைவில் வேலம்மாளின் கண்ணும், மனசும் கலங்குகின்றன.

"கால் மாத்திக் கைமாத்தித்
தோள்மாத்தி வெச்சிருந்தேன்...
பால்வாத்து என்வயித்தெ
பத்திஎரியவச்சி
ஏன்போனே ராசாத்தி
என்ன கொறை செஞ்சேன்டி-
என்ன கொறை செஞ்சேன்டி...
எரியுதடி என் வயிறு..."

மனசிற்குள் மறுகிக் குமுறும் பிலாக்கணத்தோடு, விழிக்கோணத்தில் கண்ணீர் வழிந்து மேலாடையை நனைக்கிறது.

அதோ, தொழுமுளையில்...

– ஆமாம்; லட்சுமிதான்!

இளைத்து, கிழடு தட்டி, நரம்பும் தோலுமாய் – வைக்கோலும் கழுநீரும் – போனால் போகிறது என்ற எண்ணத்தில் அல்ல; கால் படியாவது எப்பொழுதோ ஒரு வேளையில் கறக்கிறதே அதற்காக – தினசரி இரண்டு வேளையும் கிடைத்துக் கொண்டிருந்தது.

அதுவும் வீண் என்று முடிவு கட்டிவிட்டான் ஆண்டிக்கோனான்.

லட்சுமிக்கு மடி வற்றிப் போய்விட்டது; வயசாகிப் போச்சு! 'அடிமாடா'க்கிவிட முடிவு கட்டிவிட்டார்கள்.

அதோ தொழுமுளையில் வைக்கோல் திணிக்கப்பட்ட ஒரு தோல் மூட்டை இருக்கிறதே – அந்தத் தோல் மூட்டை தான் இதுநாள்வரை கால் படி பாலின் ஏகபோக வாரிசு. மூங்கில் குச்சிக் கால்களுக்குத் துள்ளல் வருமா? துடிப்பு வருமா? தைத்துவிட்டவாய் 'அம்மா' என்று கதறுமா?...

தோட்டத்துப் படலைத் திறந்து கொண்டு இரண்டு பறையர்கள் பின்தொடர ஆண்டிக்கோனான் தொழுவிற்குள் வந்தான்.

வந்தவர்கள் மாட்டைப் பார்த்தனர்.

"இன்னா அண்ணே, வெறும் தோலுதானே இருக்குது. இதுக்கா இருபது ரூபாய்?" என்று தலையைச் சொறிந்தான் ஒருவன்.

'பதினைஞ்சி ரூபாயிக்குக் குடுத்துடு, சாமி!' என்று பேரம் பேசினான் இன்னொருவன்.

– கடைசியில் பதினேழு ரூபாய்க்கு முடிவாகியது.



மாட்டை அவிழ்த்துக் கொண்டு போக வேண்டும்.

தொழுமுளையில் கட்டியிருந்த கயிற்றருகே அந்த பறையர்களை அண்டவிடாமல் எகிறி எகிறிப்பாய்ந்து சீறியது பசு.

வற்றிப்போன அந்த உடலில் எங்கிருந்து அவ்வளவு பலம் வந்து புகுந்து கொண்டதோ...? ஆஜானுபாகுவான அந்த இருவரையும் திணறடித்தது அந்தச் சொத்தைப் பசு. தொழுவில் ஒரே புழுதி மயம்! சுற்றிச் சுற்றி வந்து அவர்களின் முற்றுகையைச் சிதைத்துப் போரிட்டது.

– அப்பா! லட்சுமிக்குத்தான் என்ன ரௌத்திரம்?

ஒருவன் கையிலிருந்த கம்பால் அதன் முகத்தில் ஓங்கி ஓங்கி வெறி பிடித்தவன் போல் அடித்தான். லட்சுமி ஆன வரையிலும் எதிர்த்துப் பார்த்தது. அடிதான் மிச்சம். கண்கள் பிதுங்கின. அதன் மூக்கெல்லாம் ரத்தமும் மண்ணும் குழம்பி வழிந்தன...

என்றாலும் தொழுவை விட்டுச்செல்ல மனமின்றி மண்டியிட்டுப் படுத்துக்கொண்டது அது!

– முளையில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டார்கள்.

தலையை நிமிர்த்தி, வேலம்மாளை அது ஏறிட்டுப் பார்த்தது.

– 'என்னைத் தெய்வமாக வணங்கியவள் நீ தானே?'

லட்சுமியின் இதயக் குமுறல் வேலம்மாளுக்குப் புரியவில்லை.

அதற்குள் 'ஏய்...ஏய்' என்று அதை அதட்டி விரட்டினான் ஆண்டிக்கோனான்.

படுத்துக்கிடந்த பசுவின் கழுத்துக் கயிற்றைப் பிடித்து ஒருவன் முன்னே இழுத்தான்; பலம் கொண்ட மட்டும் மூச்சைப் பிடித்து இழுத்தான்.

கயிறு கழுத்தில் அழுந்திப் புதைந்தது.

மற்றொருவன் வாலைப் பிடித்து முறுக்கித் தள்ளினான்...

லட்சுமிக்குப் போக மனமில்லை.

'எனக்குத் தண்ணீர் வேண்டாம்; புல் வேண்டாம். இந்தத் தொழுவிலேயே பட்டினி கிடந்து சாகவாவது அனுமதிக்க மாட்டீர்களா?... இன்னும் சில நாட்களில் செத்துப் போயிடுவேன்; அதுவரை இங்கே இருக்கக் கூடாதா?'

கண்களில் நீர் மல்கக் கெஞ்சிற்று லட்சுமி.

- அடித்துப் பிடித்து ஒருவாறு அதைத் தூக்கி நிறுத்தினார்கள்.

'சீ, சனியன்! இங்கே இதுக்கு அப்பிடி என்னா வெச்சிருக்குதாம்?' என்று ஒருவன் சலித்துக் கொண்டான்.

"இங்கே எனக்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லையா? என் செல்வம், என் ராணி, என் கண்ணு!" என்று அரற்றிக்கொண்டே அவர்கள் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு தன் கன்றுக்குட்டியின் சடலத்தருகே பாய்ந்து வந்து அதை முகர்ந்து, நக்கி, முத்தம் கொடுத்து 'என் குழந்தையை என்னோடு அனுப்பிவிடுங்கள். நான் போய் விடுகிறேன்!' என்பதுபோல் கண்ணீர் சொரிந்தது லட்சுமி.

கையிலிருந்த மிலாறினால் எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கும் அதன் விலாப்புறத்தில் அடித்தாள் வேலம்மாள்.

- 'என்ன, என்ன... நீயுமா?' என்ற குமுறலுடன், 'ஹ்ம்...மோ...வ்' என்று வேலம்மாளின் முகத்துக்கு எதிரே தன் முகத்தைப் பாசத்தோடு உயர்த்திப் பரிதாபமாக அலறியது லட்சுமி.



ஊஹூம் - அவளுக்கு அதன் தாபம் புரியவில்லை; புரிய நியாயமில்லை.

செத்துப்போன தனது குழந்தையைக் குழியில் வைக்க வாரிக்கொடுத்துவிட்ட வேலம்மாளுக்கு, தோல் மீது பாசம் வைத்து வதைபடும் இந்த மாட்டின் அறிவற்ற பாசம் புரிந்துவிடுமா, என்ன?

அது அந்தப் பகுத்தறிவற்ற மாட்டு ஜன்மத்துக்குத் தெரிந்தால்தானே!

- கடைசியில் என்ன?

தன் கன்றுக்குட்டியின் பொய்யான சடலத்துக்காகத் தவியாய்த் தவித்து, துடியாய்த் துடித்த லட்சுமியைக் கதறக் கதற இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

- ஆமாம்; கசாப்புக்குத்தான்!

- - -

# 4. ‘பூ வாங்கலியா பூ’...

சிவன் கோயிலில் சந்தியா கால பூஜை மணி கிணுகிணுத்தது. கர்ப்பக்கிருக இருளில் சுடர்விடும் தீபவொளியைத் தெருவில் நின்றே தரிசித்தான் ராசாக்கண்ணு.

‘அரகரா...அரகரா...’ என்ற முணுமுணுப்பு வெளியிலும் கேட்டது. ஆராதனை முடியும் வரையில் கண் இமைகளில் ஈரம் கசிய நின்றிருந்த ராசாக்கண்ணு, ஆராதனை முடிந்ததும் தனக்கு முன் கிடந்த ‘பின்புறப் பிறை வடிவப்பாஷன்’ பாதுகையை இழுத்துக் காலில் மாட்டிக் கொண்டான். இடுப்பில் சுற்றிய துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டான். முழங்கையில், களிம்பேறிய தூக்குச் சட்டி இடிபட்டது. ‘ஹூம், தூக்குச் சட்டியெ வெளக்கணும்... நாலுநாளுக்கு மேலே ஆகுது. நிதம் வெளக்க நம்மாலே ஆகுதா?... அவள் இருந்தால்...’ ஒரு பெருமூச்சு; நடந்தான்.

‘பூ வாங்கலியா, பூ...’

அந்தக் குரலைக் கேட்டதும் நெற்றிப் பொருத்தில் கல்லடி பட்டதுபோல் ஒரு வினாடி நிலைகுலைந்து போனான் ராசாக்கண்ணு.



‘பூ வாங்கலியா, பூ...’

அவள் தன்னைத்தான் கேட்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். அவளைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் ‘விறுவிறு’வென்று நடந்தான்.

‘பூ வாங்கலியா, பூ... பூ வாங்கலியா, பூ...’

மண்டை வெடித்துவிடும்போல் இருந்தது அவனுக்கு. மேல் துண்டை எடுத்துத் தலையில் இறுக்கிச் சுற்றிக் கொண்டு வேகமாய் நடந்தான். தெருமுனையில் நின்றான். அவனே ஒருமுறை தனக்குள் சொல்லிக்கொண்டான்!

“பூ வாங்கலியா, பூ...”

அவன் குரல் விக்கி விக்கி அடைத்தது.

தலைப்பாகையை அவிழ்த்து முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். அவன் முதுகு விரிந்து விரிந்து சுருங்கித் தோள்கள் இரண்டும் குலுங்கின. மேல் துண்டின் ஒரு முனையைச் சுருட்டி வாயில் அடைத்துக் கொண்டான். தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவன் முகத்தில் குழம்பி இருந்த கண்ணீர் மினுமினுத்தது.

## 2

சிவன் கோயிலை அடுத்திருந்த தீப்பெட்டித் தொழிற்சாலையில் ராசாக்கண்ணு வேலை செய்து வந்தான். கிட்டத்தட்ட பதினைந்து வருஷமாக ராசாக்கண்ணுவுக்கும், அந்த ஊரின் ஸ்தல விருக்ஷமான பாதிரி மரத்தடியில் எழுந்தருளி சக்தியுடன் அமர்ந்திருக்கும் சர்வேச்வரனுக்கும் பரிச்சயம் உண்டு.

பளபளவென்று ஜ்வலிக்கும், பித்தளைத் தூக்குச் சட்டியில் பழைய சோற்றுப் பாரம் கனக்க, நெற்றியில் விபூதிப் பட்டை துலாம்பரமாகத் துலங்க, அரை நிஜாரும் முண்டா பனியனுமாக அவனுக்கு வேலை கிடைத்த முதல் நாளன்று கோயிலின் முன் வந்து நின்று,

அவசர அவசரமாகக் கடமைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு ஓடினபொழுது அவனுக்கு வயது பதினைந்து. அன்றிலிருந்து அந்தச் சர்வேச்வரனின் சக்தியில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. தனக்கு ஒரு நல்ல இடத்தில் வேலை கிடைக்க வேண்டுமென்று அவன் செய்த பிரார்த்தனைகள் அவனுக்கு மட்டும்தானே தெரியும்?

காதுக்குக் கீழே இறங்கிய நீண்ட கரிய கிருதாவும், கூரிய மூக்குக்கடியில் மறைந்து கிடக்கும் அரை மீசையும், பிடரியை மறைத்து எழுந்து நிற்கும் காலர் ஷர்ட்டும், பம்பாய்க்கரை வேஷ்டியின் 'மெட்ராஸ்கட்'டும், காலில் ரப்பர் ஷூவுமாகக் கோயிலே கண்ணுக்குத் தெரியாமல் கோயிலுக்கு வந்து செல்லும் குமரிகளை வட்டமிட்ட ராசாக்கண்ணு சர்வேச்வரனை விட்டு விலகிவிடவில்லை; மறந்திருந்தான். அப்பொழுது அவன் 'இளவெட்டு.'

கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அவன் எப்படியோ மாறிவிட்டான்.

பக்தி சிரத்தையோடு கையில் பூவும் பழமும் கொண்டு ஞானாம்பாள் பின்தொடர, மேல் துண்டை இடுப்பில் சுற்றிக்கொண்டு வெள்ளிக்கிழமை தோறும் வந்து அர்ச்சனை செய்த ராசாக்கண்ணுவையும்–இன்று, தெருவிலேயே நின்று சேவித்து இதய பாரத்தை மட்டும் கர்ப்பக் கிருகத்தில், அவனுக்கு விதித்திருக்கும் எல்லையையும் மீறி சர்வேச்வரனின் பாதாரவிந்தங்களில் இறக்கி வைத்து விட்டுக் கண்ணீர் கசியச் சில வினாடிகள் தன்னையும் மறந்து, தூங்காமல் தூங்கி, பிறகு விழித்து, இறக்கிய பாரத்தை ஏற்றிக்கொண்டு, விதி வழி செல்லும் இன்றைய ராசாக்கண்ணுவையும் – அபேதமான, அறிவின் கண்ணிகளுக்கு அப்பாற்பட்ட, மனம் செய்யும் சித்து விளையாட்டின் மாயையான, சூட்சுமமான, சுயம்புவான, சுமைதாங்கியுமான அந்த சர்வேச்வரன் மட்டும்தான் அறிந்து வைத்திருந்தான். ஆம், அவன் மனித வாழ்க்கையோடு விளையாடுபவன் அல்லவா? விளையாடி, வேதனைப்பட்டு விலகி நின்று, வேடிக்கை பார்த்து, விதியாய் விதி வழியாய் இருப்பவனல்லவா? – அவனுக்குத் தெரியும்!



ஆனால் சந்நிதித் தெருமுனையில் பூக்கடை வைத்திருக்கும் பூவாயிக்கு ராசாக்கண்ணுவைப் பற்றி என்ன தெரிந்திருக்க முடியும்? – தினசரி மாலை நேரங்களில் ஓரணாவுக்கு மல்லிகையோ, கதம்பமோ வாங்கித் தூக்குச் சட்டியில் போட்டுக் கொண்டு வீடு செல்லும் ஒரு வாடிக்கைக்காரன் என்று மட்டுமே தெரிந்திருந்தது.

சில நாட்களாக அதையும் – அதாவது பூ வாங்குவதையும் நிறுத்தி விட்டிருந்தான் அவன்.

'பூ வாங்கலியா, பூ...'

அவனையே பார்த்துப் பலமுறை கேட்டாள் பூவாயி; அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

'வீட்டுக்கே எவளாவது வாடிக்கையா கொண்டு வந்து கொடுக்கிறாளோ, என்னவோ?' என்று நினைத்தாள் அவள்.

சாயங்காலம் அவனுக்காகத் தனியாய் இரண்டு முழம் தொடுத்து வைத்திருப்பாளே, அதற்காகவாவது அவன் ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமோ?

"இன்னக்கி நல்ல ரோசாப்பூ இருக்கு... இன்னிக்கிக் கதம்பம் வாங்கிட்டுப் போங்க... ரெண்டு மருக்கொளுந்தும் வெக்கிறேனே!" என்றெல்லாம் வேண்டி வேண்டி வியாபாரம் பண்ணும் கலையில் கைதேர்ந்த பூவாயிக்குத் தன்னிடமிருந்து ஒரு வாடிக்கைக்காரன் விலகிப் போவது ரொம்ப வருத்தமாயிருந்தது.

'எப்பவாவது ஞாபக மறதியா அந்த வாசமில்லாத காட்டு மல்லிச் சரத்தைக் குடுத்திட்டேனா?'

என்ன நினைத்தாலும் ராசாக்கண்ணு வீடு திரும்பும் நேரத்தில், "பூ வாங்கலியா, பூ..." என்று ராகம் இழுப்பதை மட்டும் அவள் நிறுத்திக் கொள்ளவில்லை.

"பூ வாங்கலியா, பூ..."

பதிலில்லை!

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று, நான்கு, ஐந்து... ஒரு வாரம்... பத்து நாள்... பதினைந்து.

ஊஹூம்!

அவள் கோரிக்கை தொடர்ந்து அலட்சியம் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டு வந்தது!

தன்னைவிட நல்ல பூ கொடுப்பவள் யாராக இருக்க முடியும்? - எப்படியும் அவனிடம் வியாபாரத்தை மீண்டும் தொடங்கிவிட வேண்டும் என்று சங்கற்பித்துக் கொண்டாள் பூவாயி.

## 3

பாடலீசுவரர் சந்நிதியின் சந்தியாகால பூஜை மணி நாதமும், கர்ப்பக்கிருகத்தில் புகைந்து எரியும் நிவேதன ஜோதியும், பூவாயியின் குரலும், அவளிடம் வாங்கும் பூவும் அவன் தினசரி வாழ்விலிருந்து பிரிக்க முடியாதிருந்தன.

இப்பொழுது மட்டும் திடீரென அவனுக்கு என்ன வந்துவிட்டது? - யந்திரம்போல் வந்து நிற்கிறான். - தேய்ந்து போன மனிதராசிபோல், சமுதாயத்துக்கு உழைத்து நைந்து துரோகம் செய்யப்பட்ட தியாகிபோல், விடாப்பிடியாகச் சேவை செய்து வரும் செருப்பைக் கழட்டிவிட்டுக் கரங்கூப்பி நிற்கிறான். ஆண்டவனோடு ஆத்மா லயிக்கவில்லை; மனம் பாண்டி விளையாடுகிறது; எண்ணங்கள் தத்துவப் புரவிமீது சவாரி விடுகின்றன.

இருளில் ஐக்கியமாகி இருளேயாகி, ஒளியிற் சுடராகி ஒளியேயாகி, ஜீவனில் பரமாகி ஜீவனேயாகி, தாய்க்கு மகவாகித் தாயேயாகி, பெண்ணுக்கு ஆணாகிப் பெண்ணேயாகி பெண்ணேயாகி...

'...பெண்ணேயாகி, பிறகு என்னவானாள்...?'

தூணில் புதைக்கப்பட்டிருந்த சம்புடத்திலிருந்து விபூதியைக் கை நிறைய எடுத்துத் தலையை அண்ணாந்து வெறி பிடித்தவன்போல் நெற்றியில் தேய்த்துக் கொண்டான்.

-'பெண்ணேயாகி, பிறகு என்னவானாள்...?'

மனம் வலை பின்ன ஆரம்பித்தது.

'இப்படித்தான் மண்ணாப் போனா, போ!' என்று கையிலிருந்த விபூதியைக் காற்றில் ஊதிவிட்டு, கண்களைத் துடைத்துக் கொண்டான். அவன் பார்வை கர்ப்பக் கிருகத்தில் வெறித்தது. நிவேதன ஜ்வாலை துடித்தது. ஈசனின் லிங்க உருவத்தில் இருள் தெறித்துச் சிதறியதுபோல் தீபஜோதி கனன்று கருமை படர்ந்தது.

அவன் கும்பிடவும் இல்லை; கும்பிடாமலும் இல்லை. எதையும் பிரார்த்திக்கவும் இல்லை; பிரார்த்திக்காமலும் இல்லை. நின்றிருந்தான் - தன்னை மறந்து எதையோ நினைத்து மறுகிய வண்ணம் நின்றிருந்தான்.

இடுப்புத் துண்டு மேலுக்கு ஏறியது. கழட்டிவிடப்பட்ட செருப்பும் மனச்சுமையும் மீண்டும் அவனோடு ஒட்டிக் கொண்டன. வீடு நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான். எதையோ மறந்து எங்கோ வைத்துவிட்டது போன்ற உணர்ச்சி. கோயில் மணி 'டாண், டாண்' என ஒலித்துக் கொண்டிருந்தது. அதில்கூட என்னவோ சப்த நயம் குறைந்திருந்தது - 'பூ வாங்கலியா, பூ' - அந்தக் குரலைத்தான் காணோம். அவன் பார்வை பூக்கடையின்மீது, பூவாயியின்மீது விழுந்து நிலைத்தது. அவள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் பார்வையில் ஒரு பரிவு; மஞ்சள் பூசிப் பளீரிடும் வதனம்; நெற்றியில் ஒளிவீசும் குங்குமப் பொட்டு; சிகையில் குலுங்கிச் சொரியும் மல்லிகைச்சரம்; கழுத்தில் மின்னும் மஞ்சள் சரடு...

அவன் பிரக்ஞையற்றவன்போல் கடையை நோக்கி நடந்தான்.

"பூ வேணுங்களா?"

கனவிலிருந்து விழித்தவள் போல் துடிதுடிப்போடு கேட்டாள் பூவாயி.

"ஆமாம்!" என்று தலையை ஆட்டினான் ராசாக்கண்ணு.

"ஓரணாவுக்கு குடுக்கட்டுங்களா?... நல்ல கதம்பமுங்க... ஊரெல்லாம் தேடினாலும் கெடைக்காது... நல்ல மல்லிகை இருக்கு... அதிலே ஒரு முளம் குடுக்கட்டுங்களா?... கொஞ்ச நாளா நீங்க வர்ரதே இல்லியே?"

அவளுக்கு ஏற்பட்ட சந்தோஷம் அவள் வார்த்தைகளில் துடித்தது; அவள் அடைந்த வெற்றி மனசில் குதித்தது.

"ஒரு முழம் கதம்பம், ஒரு முழம் மல்லிகை..."

- அவன் குரலில் ஏன் அத்தனை நடுக்கம்?

"இத்தினி நாளு வேறெ எங்கனாச்சும் வாங்கனீங்களா?"

"இல்லை..."

"பின்னே...?"

"சம்சாரம்...சம்சாரம் இல்லை; ஊர்லே இல்லை...அ...ஆமாம்... ஊர்லே இல்லை."

"ஓஹோ!"

"இதென்ன, இவ்வளவு பூ?"

"பரவாயில்லீங்க, அம்மா ஊர்லேருந்து வந்திருக்காங்க சந்தோஷமா வச்சிக்குவாங்க!" - அவள் சிரித்தாள்.

அவன் சிரிக்க முயன்றான்; "அம்மாவோடெ வருவீங்கல்லே?" - அவன் பதில் சொல்லவில்லை.



'மனச்சுமை, மலர்ச்சுமை!'

தொண்டையில் விரக்தி சிரித்தது - நடந்தான்; அவசர அவசரமாய் நடந்தான்.

'என்ன இவ்வளவு வேகம்?'

'வீட்டுக்குப் போக வேண்டாமா? அவள் தெரு வாசற்படியில் காத்திருப்பாள்!'

'எவள்?'

வீதி முனையில் விளக்குக் கம்பத்தடியில் நின்று அந்த வீதியிலிருந்து பிரியும் மறுதெருவின் மறு கோடியில் தெரியும் வீட்டைப் பார்த்தான்; இருளின் கரிய திரை கவிந்து கிடந்தது.

'விளக்கு இல்லை! - ஆமாம்; வீட்டு விளக்கு, வாசல் விளக்கு, இதய விளக்கு, இன்ப விளக்கு...'

அவன் சிரித்தான்.

'ஏன் சிரித்தேன்?'

'அழுவதைவிடச் சிரிப்பது நல்லதல்லவா?'

தூக்குச் சட்டியைத் திறந்து பார்த்தான்; கதம்பமும் மல்லிகையும் அவனைப் பார்த்துச் சிரித்தன.

தூக்குச் சட்டியை மூடிவிட்டு முகத்தைத் தேய்த்துக் கொண்டான். உதட்டைக் கடித்துக் கொண்டு, புறங்கையால் மூக்கைத் தேய்த்து உறிஞ்சினான்.

என்ன செய்து என்ன பயன்? - கடைசியில் கண்ணீர் வந்தே விட்டது. வீட்டை நோக்கி, அந்த இருளை இலக்காகக் கொண்டு வேகமாய் நடந்தான்-ஏன்? - வாய்விட்டு அழுவதற்குத் தான்!

## 4

மறுநாள்...

மாலை நேரம்; சிவன் கோயில்; சந்தியாகால பூஜை; கோயில் மணியின் நாத ரீங்காரம்! கர்ப்பக்கிருக நிவேதன ஜோதி; பக்த கோடிகளின் முணுமுணுப்பு; எல்லாம் இருந்தன. ஒன்று இல்லை; ஒன்றே ஒன்று இல்லை.

ராசாக்கண்ணு விழித்தான்...

"பூ வாங்கலியா, பூ..."

அந்தக் குரலைக் காணோம்; பூவைக் காணோம். பூவாயியைக் காணோம்.

அவன் கண்கள் பரக்கப் பரக்கத் துடித்தன. அவனுக்கு இன்று பூ வேண்டும்; அவசியம் வேண்டும். பூ இல்லாமல் போக மனமில்லை. பூக்கடையும், பூவும், 'பூ வாங்கலியா, பூ' என்ற குரலும், பூவாயியும் தன்னை ஏமாற்றி விட்டுச் சிரிப்பதுபோல் இருந்தது அவனுக்கு.

சற்றுத் தூரத்தில் ஒரு கிழவன் பூ விற்றுக் கொண்டிருந்தான்.

"இந்தக் கடைக்காரி எங்கே?" என்று விசாரித்தான் ராசாக்கண்ணு.

"எங்கிட்டேயும் நல்ல மல்லிகை இருக்கு; கதம்பமும் இருக்கு மருக்கொழுந்து இருக்கு" என்று வியாபாரம் பண்ண ஆரம்பித்தான் கிழவன்.

"ஓரணாவுக்கு மல்லிகை குடு!"

பூவாயியின் குரல் அவன் செவிகளில் மோனமாய் ஒலித்துக்கொண்டிருந்தது.



'பூவாயி எங்கே?... அந்தக் குரலுக்கு என்ன நேர்ந்தது?' என்று அவன் மனம் புலம்பியது.

அன்று அவன் வீதி முனையில் நிற்கவில்லை; தூக்குச் சட்டியைத் திறந்து பார்க்கவில்லை; அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடவில்லை – தளர்ந்து மெள்ள நகர்ந்தான்...

"மூளை ரொம்பக் குழம்பிப் போச்சு!" என்று அவன் முனகிக்கொண்டான்.

'ஞானாம்பா...!'

நீண்ட பெருமூச்சு! வெகு தூரத்தில் அவன் நடந்து கொண்டிருந்தான்.

## 5

அதன் பிறகு, தொடர்ந்து பல நாட்களாகப் பூவாயியின் குரலை அவன் கேட்கவில்லை; அவனால் பூ வாங்காமலும் இருக்க முடியவில்லை.

'மலர்ச்சுமை, மனச்சுமை!'

இரண்டும் குவிந்து கொண்டே இருந்தன.

அன்று ஞாயிற்றுக்கிழமை; ராசாக்கண்ணு வீட்டிலிருந்தான்.

'கோயிலுக்குப் போக வேண்டும்; பூ வாங்கிக் கொண்டு வர வேண்டும்'

'ஏன்?... ஏன் பூ வாங்கிக்கொண்டு வர வேண்டும்?' என்று தனக்குள் 'நசிகேதத்தனம்' பண்ணிக் கொண்டிருக்கையில், 'பூ வாங்கலியா, பூ...' என்ற குரல் தெருவில் ஒலித்தது.

ராசாக்கண்ணுவின் முகம் மலர்ந்தது; அவசரமாக ஓடிக் கதவைத் திறந்தான்.

"பூ வாங்கலியா, பூ..."

குரல் அவன் வீட்டருகே ஒலித்தது; வாசலில் நின்று பார்த்தான் - இடுப்பில் பூக்கூடையுடன் நிற்பது யார்? பூவாயியா?...

அவள் முகத்தில் மஞ்சளின் திவ்யக் கறையைக் காணோம்; நெற்றியில் திலகம் இல்லை; தலையில் பூவும் இல்லை.

"பூ வாங்கலியா..."

ராசாக்கண்ணுவின் முகத்தைப் பார்த்ததும் அவள் குரல் அடைத்துப் போயிற்று.

"பூவாயி, இது என்ன கோலம்?" என்று பதறினான் ராசாக்கண்ணு.

அவள் சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

"அவுரு...அவுரு... எங்க வூட்டு ஐயா போயிட்டாருங்க..."

ராசாக்கண்ணு முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டான்; அவள் விம்மும் குரல் அவன் பிடரியைத் தாக்கிற்று.

"ரெண்டு நாளு காச்சல்லே என்னெ மோசம் பண்ணிட்டாருங்க..."

'உலகத்திலே எல்லோரும் மோசக்காரங்கதான்!'

துயரமற்ற விரக்தி அவன் குரலில் கரகரத்தது. சற்று நேரம் அவர்களிடையே ஆழ்ந்த மௌனம்; அமைதி.

'கதம்பம் குடுக்கட்டுங்களா...?'

'உம்...'

"இப்போ நான் கடையை எடுத்துப்பிட்டேன்; இனிமே வீட்டுக்கு வந்து அம்மாகிட்டேயே குடுத்துடறேன்!" என்று சொல்லிக்கொண்டே வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தாள் அவள்; அவன் அவளைத் தடுக்கவில்லை.

'அம்மா...அம்மா...பூம்மா...?'

ராசாக்கண்ணு வாசற்படியில் நின்று உரத்த குரலில் விழிகள் பிதுங்கக் 'கடகட'வென்று சிரித்தான்...

"என்ன சிரிக்கிறீங்க?"

'அழறதைவிடச் சிரிக்கறது நல்லது!'

'என்ன சொல்கிறீங்க நீங்க?'

'உன் நிலைதான் என் நிலையும்!'

'ஐயோ!'

அவள் பதறிப் போய்க் கூடத்தைப் பார்த்தாள்.

கூடத்து மூலையில் இரண்டு பட்டுப் புடவைகளும், அதன் மீது சில வளையல்களும் தாலிச்சரடும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதற்கு நேர்ச் சுவரில் அவன் மனைவியின் படம் இருந்தது. அதைச் சுற்றிக் கதம்பமும் மல்லிகையும் உலர்ந்து உதிர்ந்து சிதறிக் கிடந்தன.

அவள் கை கூப்பி நின்றாள்...

'அம்மா, நீ பாக்கியசாலி!'

அவன் சிலையாய், மரமாய், ஜடமாய் நின்றான். அழவுமில்லை; சிரிக்கவுமில்லை.

'சரி, பூ குடுத்துட்டுப் போ...'

ஒரு முழம் கதம்பத்தை அவளிடமிருந்து வாங்கும் பொழுது அவளை உற்று நோக்கினான் அவன். அவள் முகம் சிவந்தது; கண்கள் கலங்கின.

‘பூவாயி, எல்லோருக்கும் பூ கொடுக்கும் நீ...’

‘அதுக்குக் குடுத்து வைக்கலீங்களே.’

அவன் கைகள் பூச்சரத்துடன் அவள் முகம் நோக்கி உயர்ந்தன.

‘பூவாயி, நீ கொடுத்து வைத்தவள்தான்!’

அள்ளிச் செருகிய அவள் கூந்தலில் கதம்பத்தைச் சூட்டினான் ராசாக்கண்ணு.

‘ஐயோ, இதென்னங்க...?’

அவள் குரல் நடுங்கிற்று. அவன் முகத்தை மூடிக் கொண்டான்...

## 6

வாசற்படியில் நின்று சுற்றுமுற்றும் பார்த்த பூவாயி, கண்களைத் துடைத்துக் கொண்டு தெருவைக் கடந்து வேகமாகப் போய்விட்டாள். ராசாக்கண்ணு வெளியே வந்து பார்த்தபொழுது அவள் கூந்தலில் சூட்டிய பூச்சரம் பூமியில் புழுதியில் ஒரு கொத்துச் சிகையுடன் கசங்கிக் கிடந்தது.

அவன் மௌனமாய் நின்றான்.

‘பூ வாங்கலியா, பூ...’

பூவாயியின் குரல் வெகு தூரத்தில் தேய்ந்து, ஒலித்து ஒலியிழந்து ஒடுங்கியது.

அதன் பிறகு அவன் அவளைப் பார்க்கவுமில்லை; அந்தக் குரலைக் கேட்கவும் இல்லை!

- - -